# திறவுகோல்

2053 தை
மாத இதழ்



**அனைவருக்கும்
இனிய பொங்கல்
வாழ்த்துகள்!!**

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# மருமகனுக்கு ஒரு கடிதம்...!



முனைவர் சா.சம்பத்

என் இனிய மாப்பிள்ளைக்கு.....!
இப்போது என் மகளுக்கு கணவர் நீங்கள்...!?
அவள் விருப்பப்படியே .....!
அதற்கு உங்களின் கைமாறு...
அவளை வைத்துக்கொள்ள வேண்டும். ..
மகிழ்ச்சியாக ...!

என் வீட்டில் அன்பால்
துள்ளித் திரிந்ததைவிட.....!
உங்களோடு மகிழ்ச்சி துள்ளளோடு இருக்க வேண்டும் அவள்.... !
ஒரு சராசரி தந்தையாய்..
எனது ஆசை எல்லாம் ......?

அவள் மகிழ்ச்சிக்கு குறை ஏதும் இல்லாமல் நீங்கள்....
பார்த்துக்கொள்வீர்கள் என்பதே...!?
காரணம் எனக்கு எல்லாமும் அவள்தான்...!?

அவள் எப்போதுமே எனக்கு உதவியாக இருந்துள்ளால்......!
எனது பணியில் ,குடும்பத்தில், சுற்றத்தில் ....!?
அதுதான் என் சுவாசம் இயல்பாக இருப்பதற்கும்..!
என் மனைவி, மகன் இதழ்களில் ....
புன்னகை பூப்பதற்கும் காரணம். .....!?

என் வீட்டின் தங்க தேர் அவள்....!?
இனி உங்கள் வீட்டில் உலா வரப்போகிறது......?
அதை நீங்கள் உணர்வீர்கள். ....!
எங்கள் உலகத்தை உங்களுக்கு தாரை வார்த்துத் தந்திருக்கிறோம்.... !
அந்த உலகம் என்றென்றைக்கும்
உங்களுக்கு அழகாக இருக்கும்....!?

எங்கள் வீட்டு இளவரசியை ..
உங்களிடம் அனுப்பியிருக்கிறேன்...!

அவள் உங்கள் வீட்டின் ராணியாக .
திகழ வேண்டும்...... !

எனது இரத்தமும், வியர்வையும் அவளை ஆளாக்கியிருக்கிறது......!
இப்போது அவள் மாசறு பொன்னாக இருக்கிறாள்.......!?

அவள் உங்கள் வீட்டில் காட்டும் ....
அன்பும், அக்கறையும் ......!
உங்களை மெய்மறக்க செய்யும்..?
எனவே அவளை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள். ...!?
அவளிடம் சிறு தவறு ஏதும் இருந்தால்... கண்டிப்பாக திருத்துங்கள்... !
ஆனாலும் அவள் மேல் செலுத்தும் அன்பில் குறைவைக்காதீர்கள்..... !?
அவள் மிகவும் மென்மையானவள்....!

அவள் எப்போதாவது துவண்டு போய் இருந்தால் அவளுடன் இருங்கள். ...!
உங்களது சிறு கவனம் அவளுக்கு போதும், ஆறுதல் தர.....!

அவளை மாதக் கணக்கில் காண முடியவில்லை என்றாலும் பரவாயில்லை...!
நான் அலுவலகத்தில் இருந்து வந்ததும் அவள் குரலை தினம் தினம் கேட்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை....!

என் மகளின் மகிழ்ச்சி மட்டுமே எங்கள் வாழ்நாள் லட்சியம்.....
எனவே, தயவு செய்து அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்....!
அன்பிற்குரிய எனது மருமகனே...!
இந்த வார்த்தைகளின் அர்த்தம் இப்பொழுது உங்களுக்கு புரியாமல் கூட போகலாம் ..!

ஆனால், நாளை நீங்கள் தந்தையாகும் போது .....!
எனது வார்த்தைகளின் அர்த்தம் புரியும்....!

அப்பொழுது உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும்...?

என் மகன், மகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று சொல்லும். ....!
அதனால் தயவு செய்து எனது மகளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்....!

காரணம் அவள் எங்கள் உயிர்....!
உங்களில் சரி பாதி....!?

- முனைவர் சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

# கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாத - பட்டினப்பாலை



இளவரசி இளங்கோவன்

திறவுகோல் வாசகர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம். நீண்ட நெடுநாளாக சங்க இலக்கியங்களை படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் இருந்து வந்தது. அமெரிக்காவிலுள்ள ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் வழியாக எனக்கு ஓர் அரும்பெரும் வாய்ப்பு கிட்டியது. ஆம் பாரதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமெரிக்காவின் ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் நிகழ்த்திய ஞானபாரதி விருதுக்கான நான்கு கட்ட பேச்சுப் போட்டி நடைபெற்றது. அதில் அரையிறுதிச் சுற்றில் சங்க இலக்கியங்களுள் ஒன்றான பட்டினப்பாலையையும், நெடுநல்வாடையையும் அறியும் வாய்ப்பு கிடைத்தற்கரிய வரமாக கிடைத்தது. தமிழை வாழ்த்துவதற்கும், வளர்ப்பதற்கும் கடின உழைப்பை உரமாக இட்டு தமிழ்த் தொண்டு ஆற்றி வரும் அமரிக்காவின் ஹூஸ்டன் பாரதி கலை மன்றத்திற்கு நிச்சயம் தமிழ் கூறும் நல்லுலகம் சார்பாக கோடி நன்றிகள்.

12 ஆம் வகுப்புக்கு பிறகு தமிழ் கற்கும் வாய்ப்பு கிட்டத்தட்ட 10 வருடங்கள் இல்லாமல் போனது. ஆங்கிலவழி கணினி தொழில்நுட்ப கல்வி, தொழில்நுட்ப வேலை, புலம்பெயர்வு என தமிழன்னையை தரிசிக்க தவறிய தருணங்கள் அவை. புலம்பெயர்ந்த நாடான கனடா மீண்டும் என்னை உயிர்ப்பித்து என் தாய்த்தமிழை வாசிக்கும் வாய்ப்பு தந்தது. அதற்க்கு முக்கிய மூல காரணமாக அமைந்தவர்கள் என் ஈழத்தமிழ் உறவுகள், மேலும் மெருகேற்றியவர்கள் மன்னையின் மைந்தர்கள் அமைப்பு சகோதர சகோதரிகள். மீண்டும் வாசிப்பு பழக்கம், எழுதும் வழக்கம், பேச்சு எல்லாம் கைக்கொள்ள இன்று தமிழன்னையின் பெருமை வெளிச்சத்தில் நானும் ஒரு சிறு துளி வெளிச்சம் பெற்று ஒளிரும் நிலவானேன்.

பட்டினப்பாலையை பற்றிய தேடல் என்னை மேலும் மேலும் எனது தாய் மொழியை பற்றியும், தமிழர்களின் வாழ்வியலை பற்றியும் பெருமை கொள்ள செய்தது . பெருமை கதைகள், வரலாறுகள் மட்டுமே பேசினால் போதுமா? இன்றைய வாழ்வியலில் நம்பிக்கைக்கையின்மை, சுயநலம், எந்த வழியிலாவது பொருள் ஈட்டினால் போதும், குறுகிய காலத்தில் குறுக்கு வழியில் பொருள் ஈட்டுவது போன்ற எண்ணங்களும் செயல்களும் மேலோங்க காரணமாக இருப்பது சற்றே குறைந்து போன எமது முன்னோர்கள் வாழ்வியல் கோட்பாடாக வரித்து கொண்ட அற உணர்வு தான் என்பது எனது கருத்து. இதனை மீட்டெடுக்க நாம் நமது வரலாற்றை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் செய்யும் செயல்களில், வணிகத்தில்,

வேலையில், கல்வியில், குடும்பத்தில் என எங்கெல்லாம் முடிந்தவரை செயல்படுத்த முடிகிறதோ அங்கெல்லாம் உறுதியாக கடைபிடிக்க வேண்டும். வாழ்வியல் கொள்கைகளாக வரித்து கொள்ள வேண்டும்.

பண்டைய தமிழர்களின் வரலாற்றுக்குரிய அரிய சான்றுகள் பலவற்றைத் தாங்கி நிற்பதும் , பண்டைத் தமிழர்களின் வாழ்வியலையும், வணிகநிலையையும் குறிப்பிடுகினற சங்க இலக்கியங்கள் ஓர் காலக்கண்ணாடி என்றே சொல்ல வேண்டும்.

சங்க இலக்கியங்களுள் ஒன்றான பத்துப் பாட்டுக்களில் ஒன்பதாவது விளங்குவது பட்டினப்பாலை. இது சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கதாநாயகனாக கொண்டு கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது.

கரிகால் சோழன் பெருவளத்தான் திரைக்கடலில் நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடுகளுடன் வாணிபத்தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கும், தமிழர்களுக்கும் உலகப்புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். கரிகால் சோழனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப்பாலை ஆகும்.

பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினம் ஆகும். இந்நகரை புகார், பூம்புகார் எனவும் அழைப்பர்.

இதற்க்கு முதல் உரை எழுதிய நச்சினார்க்கினியர் பின்வருமாறு பெயர்காரணத்தை விளக்குகிறார்.

"இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணை யாகலின், இதற்குப் பட்டினப்பாலை என்று பெயர்". கழனியும், காவிரியும், உழவும் செழித்து விளங்கிய சோழமண்டலத்தில் பாலை எப்படி வந்தது? என்று யோசித்தால் "பாலையாவது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் கூறுவது" என்பதனை விடையாக தருகிறாள் தமிழன்னை .இக்காரணத்தால் இந்நூல் "பாலைபாட்டு" என்றும் அழைக்கப்படுகிறது.

இந்நூலில் 163 அடிகள் வஞ்சிப்பாவல் அமைந்துள்ளது.இடையிடையே ஆசிரியப்பா அமைந்த வஞ்சி நெடும் பாட்டாக 301 அடிகளை கொண்டது பட்டினப்பாலை. இந்நூலுக்கு "வஞ்சிநெடும் பாட்டு" என்ற பெயர் இருந்தமையை தமிழ் விடு தூது குறிப்பிடுகிறது.

பட்டினப்பாலை நூலை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு அரசன் கரிகாற் பெருவளத்தான் பரிசில் கொடுத்து சிறப்பு செய்த குறிப்பு பட்டினப்பாலையில்

இல்லை. ஆனால் பதினாறு நூறாயிரம் பொன் (16X 100000=16,00000 லட்சம் பொற்காசுகள்) வழங்கினான் என்ற குறிப்பு பிற்கால நூலான இராசராசன் உலாவில் பதிவாகியுள்ளது.

கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழிலும் திருவெள்ளறைக் கல்வெட்டிலும் இச்செய்தி பதிவாகியுள்ளது.உலகிலேயே அதிக பரிசில் பெற்ற முதற் புலவர் இவராகத்தான் இருந்திருப்பார்.இன்று இந்திய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் வழங்கப்படும் மதிப்பிற்குரிய சிறந்த சாகித்ய அகாடமி விருதுக்கு கூட பரிசுத்தொகையாக 1,00,000 ரூபாயும், ஒரு பட்டயமும் தான் வழங்கப்படுகின்றன.

உலக புகழ் பெற்ற நோபல் விருதில் நோபல் ஒரு பட்டயமும், பதக்கம் மற்றும் ரொக்க பணமும் விருதுடன் வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு பெறும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் ரொக்கப் பரிசை நோபல் அறக்கட்டளை தீர்மானிக்கிறது. கடந்த 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நோபல் பரிசுடன் ரொக்கப் பரிசு 8 மில்லியன் SEK (சுமார் US$1.1 மில்லியன் அல்லது 1.16 மில்லியன்).அதாவது 1,100,000 அமெரிக்க டொலர்கள். இந்திய இந்திய மதிப்பில் 2020 ஆம் ஆண்டு வழங்க பட்ட தொகை 8,1269663.2 கோடி ஆகும்.16,00000 லட்சம் பொற்காசுகளின் இன்றைய மதிப்பினை முடிந்தால் கணக்கிட்டுக்கொள்ளுங்கள்.

இதிலிருந்தே பட்டினப்பாலையின் சிறப்பும் அரசன் கரிகால் பெருவளத்தானின் சிறப்பும் கொடையும் சோழ நாட்டின் வளமும் அறிய கிடைக்கின்றது.பட்டினப்பாலை நூல் தமிழறிஞர்கள் பலரின் உள்ளங் கொள்ளைகொண்ட நூலாக இருக்கிறது . இந்த நூலுக்குப் பண்டைத் தமிழாசிரியர் நச்சினார்க்கினியரும், இருபதாம் நூற்றாண்டின் அறிஞர்களான தவத்திரு மறைமலையடிகளாரும், அறிஞர் இரா. இராகவையங்காரும், பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனாரும் எழுதியுள்ள உரைப்பகுதிகளைக் வாசித்தால் பட்டினப்பாலை என்னும் இந்நூல் அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த காரணத்தையூம் ம் இன்றும் இந்நூல் தமிழறிஞர்கள் பலரையும் தன்பால் கவர்ந்திழுக்கும் காரணம் விளங்கும்.

இதை அனைத்தையும் தேடி தெரிந்து கொள்ள காரணமாக அமைந்த பட்டினமாலையின் வரிகளுக்கு வருவோம்.பட்டினபலையிலிருந்து "கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாத" என்ற 210 அடி அணைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வடியின் பொருள் புரிந்து கொள்ள அதன் தொடக்கம் முதல் போகவேண்டும். பட்டினலையின் அழகு தமிழின் ஒரு துளி பருகுவோம். வாருங்கள்.

கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல

நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாத
பல்பண்டம் பகர்ந்துவீசும்

'சோழ நாடு சோறுடைத்து' என்பது பழமொழி. அத்தகைய உலகுக்கே சோறுபோட்ட சோழ நாட்டின் உழவர் பெருமையை கூறி அதன் தொடர்ச்சியாக மேற்கண்ட அடிகள் சோழநாட்டின் துறைமுக நகரமாக தற்போது கடலுக்கடியில் கண்டுபிடிக்கப்பட காத்திருக்கும் தமிழரின் பொக்கிடமான பூம்புகார் நகரில் வாழ்ந்த வணிகரின் பெருமையை கூறுகிறது.

உழவரின் ஏரில் இரண்டு மாடுகள் பூட்டிய நுகத்தின் நடுவில் இருக்கும் அதாவது நுகத்தடியில் இருக்கும் பகலாணி போல அறந்தவராத நடுவுநிலை கொண்ட நேர்மையான மக்களையும், மண்ணையும் நேசித்த நல்ல எண்ணங்கள் கொண்டு வணிகர்கள் வாணிகம் செய்தனர்.

தமக்கும் தன் தலைமுறைக்கும் பழி வந்துவிடுமோ என்னும் அச்சத்தோடு சொன்னசொல் மாறாமல் வாய்மையையே பேசினர்.

தாம் கொடுக்கும் பொருளையும் அதிக அநியாய விலை வைத்து பொருள்களை விற்க்காமலும், நுகர்வோர் கொடுக்கும் விலைக்கு அளவில் குறைவாக கொடுக்காமலும், தாம் பிறரிடமிருந்து விலையாக வாங்கும் பொருளைகளை நியாயமான விலைக்கு விளைவித்தவர்களிடமிருந்தும் பிற வணிகரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளவும் செய்து தமிழ் கூறிய அறவழியில் வணிகம் செய்வர். தம் வவிற்கும் மற்றும் வாங்கும் பொருள்களை ஒத்த நிறையுடையதாகக் கருதினர். எனவே மதிப்புக்கு அதிகமாக வாங்குவதோ, குறையாகக் கொடுப்பதோ அவர்களின் வாழ்க்கையில் இல்லை.

அதாவது அடிமாட்டு விலைக்கு அல்லது கெட்டதுக்கு பாதி என் எங்கள் ஊரில் சொல்லுவார்கள், அப்படி பொருட்களை விளைவிப்பவர்களிடம் வாங்காமலும் அதேபோல யானை விலை, குதிரை விலை என கொள்ளை விலைக்கு விற்க்காமலும் (தற்போதைய அமேசான், பிளிப்க்கார்ட் போன்ற பெரிய நிறுவனங்கள் நினைவுக்கு வருகிறது) அறத்தோடு முறையான நேர்மையான வணிகம் செய்து வளமாக வாழ்ந்தனர்.

பல பண்டங்களையும் உண்மை விலைகூறி, தாம் பெரும் லாபத்தையும் வெளிப்படையாகக் கூறி விற்பதும் வாங்குவதுமாக தம் குடிக்குப் பழி வராதபடி

நேர்மையான முறையிலும் நடுவுநிலையுடனும் வணிகம் செய்தனர் என்பதை அறியும்பொழுது பண்டைக்கால வணிகமுறை நமக்குப் புலனாகிறது.

வணிகம் எப்படி செய்ய வேண்டும் என்பதை வணிகரின் சிறப்பை கூறுவதன் மூலம் தெளிவாக விலக்கிவிட்டது பட்டினப்பாலை. கிமு 5 ஆம் நூற்றாண்டு சீன போரியல் மேதை சுன் த்சு என்பவரால் எழுதப்பட்டபோர்க்கலை (The Art of War) என்னும் நூல் இப்பொது தொழில் முனைவோருக்கான உத்திகளாக பயன்படுத்தப்பட்டு பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. அதை போல இன்னும் ஆய்வு நோக்குடன் ஆங்கிலத்தில் எழுதினால் மிகச்சிறந்த தொழில் முனைவோருக்கான ஆகச்சிறந்த நூல் கிடைக்கும். யாருக்கு தெரியும் அதிர்க்களத்தில் நானே அப்படி ஒரு நூல் எழுதினாலும் ஆச்சரியமில்லை.

தமிழர் என சொல்லும் நாம் இம்முறையில் வணிகம் செய்கிறோமா என்பதை உங்களது மனச்சாட்சிக்கு விட்டுவிடுகிறேன். கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி. உலகை ஆண்ட தமிழர்கள் . எல்லாம் உண்மை வரலாறு மறுக்கமுடியாத சத்தியம். நாளை உலகை போகிறான் தமிழன் என மார்தட்டிக்கொள்ளும் நாம் தமிழ் காட்டிய அறவழியில் சென்றால் மட்டுமே அது சாத்தியம்,சத்தியம்.

கீழடி போன்ற ஆய்வுகள் சங்க இலக்கியங்களுக்கு உண்மைத்தன்மையினை அளித்து தமிழர் பெருமையை தானாக வெளிகொண்டுவருவது ஒரு பக்கமிருந்தாலும் தமிழர் என சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் பழி பாவங்களுக்கு அஞ்சி நன்நெஞ்சோடு நேர்பட நின்ரு அறவழி வாழ்தல் மட்டுமே இவ்விலக்கியங்கள் காட்டும் தமிழரின் பெருமையை மேம்பாட்டை ஆளுமையை உலகறிய செய்யும்.உலகை தமிழன் ஆள வழி வகை செய்யும்.

இக்கட்டுரையை படிப்பதற்கு நீங்கள் செலவிட்ட உங்கள் நேரத்துக்கும் தமிழின் பால் கொண்ட அன்பிற்கும் நன்றிகள். அடுத்தவாரம் பட்டினப்பாலை கூறும் காவிரியின் பெருமையை பார்க்கலாம். நன்றி

--

இளவரசி இளங்கோவன்,
பரவாக்கோட்டை

# உன்பெயர்

எழுதி எழுதி அழித்து விடுகிறேன்
ஆனால் மனதில் ரத்த நாணங்களில்
சேர்ந்துவிட்ட உனது பெயர்
எதை கொண்டும்
அழித்துவிடமுடியாது..

உன் நினைவுகள் அவ்வப்போது
உதிர்கின்ற சருகாகவும்
மண்ணை முட்டி முளைக்கும் சிறு
விதையாகவும் என்நெஞ்சில்
விடயமாகவே இருக்கிறது...

மலர்கள் உதிர்ந்த மரங்களை கண்டால்
மனம் அங்கேயே நின்றுவிடுகிறது நாம்
அங்கே கைக்கோர்த்து கதைபேசிய
நாட்களை கடத்தமுடியாமல் மனம்
அங்கேயே நின்றுவிடுகிறது ....!!

இடைவெளி என்பது காலத்திற்கு
மட்டுமே காதல் மனதிற்கு இல்லை
விரைந்து வா என்னவளே மூங்கில் காடு
காத்திருக்கு புது ராகம் பாட மௌன
கீதம் பாட என்னை அதற்குள்
புகுத்திவிடாதே கடிந்து வா ...!!!

***

# அவள் உதிர்த்துவிட்ட

ஒற்றை நினைவுகள் தான்
இன்று கட்டியாளுகின்றது பல
கவிதைகளை..........!!!

***

# சாலையின் ஓரம் ஆங்காங்கே

முளைத்துவிட்டன
மஞ்சளும்
குங்குமமும்
செங்கரும்பும்....
பொங்கலை வரவேற்றபடி....!!!!!

–

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்,
8867933021



ஓவியம்:
B. பார்வதி

# பொங்கல் பாரு!!! கும்மிப்பாட்டு பாடு!!!.

கும்மியடி பெண்ணே கும்மியடி
போகிப் பண்டிகை வரவேற்று
கும்மியடி
பழையன கழிதலும் புதியன புகுதலும்
பொருளுக்கு மட்டில்லை
வாழ்க்கைக்கும் என்று
கும்மியடி

முடிந்தது முடிந்தது தொடர்வது
துலங்குமது
வாழ்வே சிறந்திடும் உண்மையை
உணர்த்த
கும்மியடி பெண்ணே கும்மியடி
போகிப் பண்டிகை போற்றி
கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி
தைப்பொங்கலை வரவேற்று
கும்மியடி
எங்களின் வாழ்நாளின் கண்கண்ட
தெய்வம்
கதிரவ பகவானை மனதாரவணங்கியே
கும்மியடி

சக்கரைப்பொங்கலைப் போன்றே
சகலமும் சுவைத்திட
பொங்கலோ பொங்கலென்று
மகிழ்ச்சி பொங்கிட
கும்மியடி பெண்ணே கும்மியடி
தைப்பொங்கலைப் போற்றி
கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி
மாட்டுப்பொங்கலை வரவேற்று
கும்மியடி
உழவுக்கு உறுதுணைதயாய் நின்ற
மாட்டிற்கு
வண்ண வர்ணங்கள் பூசியே
கும்மியடி

வீரவிளையாட்டுகள் அதனுடன்
விளையாடி
என்றும் நம் வீட்டிலது ஒருவரென்று
கும்மியடி பெண்ணே கும்மியடி
மாட்டுப்பொங்கலை போற்றியே
கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி
காணும்பொங்கலை வரவேற்று
கும்மியடி
உற்றார் மற்றும் உறவினரோடு
கூடியே
திருநாளை ரசித்தபடி மகிழ்ந்தே
கும்மியடி

வாழ்க்கைத்தோணியில்
சகபயணிகளால்
அழகாகும் வாழ்வே
உறவினர்கள் அவரே உன்னதத்தை
உணர்த்த
கும்மியடி பெண்ணே கும்மியடி
காணும்பொங்கலை போற்றியே
கும்மியடி

–

இரா. ரம்யபாரதி

# வேர்களை மறக்கலாமா?

ஏறிய தேசியக்கொடிக்காக
இறங்கிய தாலிக்கொடிகளை
எண்ணுவோம்

தேசியக்கொடிக்குளிருக்கும்
குதூகலத்திற்காக
மலர்களை உதிர்ந்திட்ட
மங்கையரை மனதில் ஏற்றுவோம்

கம்பீரமாக பறக்கும் கொடிக்காக
அவமானங்கள் ஆயிரமாயிரம் சுமந்த
முன்னோர்களை நெஞ்சில்
ஏந்துவோம்

சுதந்திரக் காற்றை
நாம் சுவாசிக்க
அடிமை விலங்கொடிக்க
அவமானங்களை அணிந்த
முன்னோர்களை
அன்பின் பிடியில் அமர்த்துவோம்

விடுதலை
மரத்தின் காய் கனிகளை
புசிக்கும் நாம்

அதன் வேர்களில்
விழுந்தெழ மறந்துவிடுகிறோம்

வேர்களில்
விழுந்தெழுவோம்
தியாகிகளை
தொழுது மகிழ்வோம்

## மகளே வா மாற்றங்கள் தா

இது நாள்
வரையிலும் இப்படி ஒரு இறுக்கமான
சூழல்களோடு
எந்த மகளும் பிறக்கவில்லை
உன்னைப்போல...

ஓவென உற்சாக குரலெழுப்பி
உன்னை வரவேற்க முடியாமல்
ஓமைக்ரானென
ஒதுங்கி நிற்கும் சூழல்...

வாழ்த்துக்கள் சொல்ல வேண்டிய
வாய்களுக்கு
முகக் கவசபூட்டுகள்

கலகலப்பாக
குலுக்க வேண்டிய
கைகளுக்கு
சானிடைசர்
பசைகள்

உலகம் சுற்றி
உறவுகளை
வளர்க்காமல்
உள்ளுக்குள் முடங்க ஊரடங்குகள்...

கட்டியணைத்து
அன்பை பகிராமல்
தள்ளி நிற்கும்
தனிமனித இடைவெளிகள்

இப்படியாக
ஆயிரமாயிரம்
தடைகள்
அணி வகுத்தாலும்

பிறக்கப்போகும் புத்தாண்டின்
புது மகளே

உதிக்கின்ற சூரியனாய் - நீ
உற்சாகத்தோடு வா

உன் ஒளிச்சாட்டையின்
கருணை கதிர்களால்
மண்ணில் வீழ்ந்து
நம்பிக்கைகள் மரமாகட்டும்...

தடைகளெல்லாம்
நமக்கு
வலுசேர்க்கும்
உரமாகட்டும்

–

நேசமுடன் ஈசு,
அலைபேசி 9080628870





ஓவியம்:
சாதனா பரந்தாமன்,
விருதை

# பசித்த வயிறுகள்

காத்துக் கொண்டிருக்கிறேன்
இன்னமும் இருளவில்லை
நீயொளிரும் வானம்.

*

கருகத் துவங்கின விதைகள்
வறண்ட மண்ணில்
கண்ணீரின் பெருமழை

*

வீட்டில் புகுந்த மின்மினி
விரட்டிட மனமில்லை
இல்லந்தேடி விளக்கு

*

கலங்கிய நீரில்
எளிதாய் சிக்கிக்கொள்கின்றன
தூண்டில் மீன்கள்

*

தன் வருகைக்காய் காத்திருக்கும்
குழந்தையை யோசிப்பதில்லை
சாலையில் கிடக்கும் குடிகாரன்

*

மகன்களின் அம்மாக்கள்
மருமகளிடம் வசவுவாங்கியே
கழிக்க நேரிடுகிறது காலத்தை

*

போராட்டத்தின் பட்டாசுகள்
வெடித்துச் சிதறுகிறது
செவிடான அதிகாரத்தின் காதில்

*

குழந்தையை உறங்கவைத்து
இரசித்துக் கொண்டிருக்கிறது
பக்கத்தில் பொம்மை.

*

நட்சத்திரங்கள் உதிக்கின்றன
நிலவும் சுடரத் துவங்கிற்று
வீதியெங்கும் பசித்த வயிறுகள்

*

தேர்தல் முடிந்துவிட்டது
குண்டும் குழியுமான சாலையாய்
வாக்குறுதிகள்

*

சனிக்குப்பின்னால் ஞாயிறும்
ஞாயிறுக்குப்பின்னால் திங்களும்
அலையலையாய் திரும்ப எழுகின்றன

*

ஒற்றையடிப் பாதைகள்
நடந்தவர்களின் பாதங்களைப்
நினைவில் வைத்துள்ளன பாதையாக

*

கடலைத் தங்கத்தால் மினுக்கி
அலைகளால் தாலாட்டுகிறது
உதய அஸ்தமனம்

*

நண்டுகள் வரையும் ஓவியங்களைக்
கொஞ்சமும் இரசிக்கவிடுவதில்லை
பொறாமை பிடித்த அலைகள்

*

செங்கல் சூளையில் தாய்தந்தை
தனிமையின் துயரில்
வெந்தவண்ணம் பிள்ளைகள்

*
தேவைகள் மிகும்போது
முள்செடியிலும் மலர்கிறது
மனங்கவரும் பூக்கள்

*
காய்ந்து உதிர்கின்றன சருகுகள்
மரத்தின் உடலெங்கும்
சோகத் தழும்புகள்

*
மீன்களின் களவிக்கு
நஞ்சத்திர விடுதியானது
அருகருகேப் பூத்த அல்லிகள்

*
மனிதனுக்குப் பிறக்கலாம் கப்பல்கள்
தாலாட்டி வாழ்விப்பது என்னவோ
கடல் அன்னைகள்தான்

*
கடலுக்குள் விழும் விண்மீன்கள்
என்றுமே அகப்படுவதில்லை
மீனவர்கள் வலைகளில்

*
நதியை விழுங்கும் கடலை
வானம் விழுங்குகிறது
வானைவிழுங்கி செழிக்கிறது மண்

*
பூனையிடம் நட்பான எலிகள்
அணில்களின் கூடுகளைக்
காட்டிக் கொடுக்கின்றன.

*
சேவல்கள் எவ்வளவோ கூவியும்
இன்னமும் விடியவில்லை
சிலரின் கிழக்கு.

*
கப்பலில் பயணித்தலைவிட.
கரையின் அலைகளோடு விளையாடல்
சொர்க்கத்தில் களித்தல்

*
ஏரி நிரம்பியிருக்கிறது
குளங்கள் தளும்புகின்றன
வீட்டில் தண்ணீர்க்கேன்.

ஏரின் மாந்தர்

வியர்வையை வீரிய விதையாக்கி
வெயில்மழை வேதனை எருவாக்கி
வறண்ட பூமியைச் சரியாக்கி
வாங்கிய கடனைக் கரியாக்கி
கடவுளை வணங்கித் துவங்கிடுவார்
கௌரவத்துக்காகவேப் பயிரிடுவார்
கர்ப்பமுற்றத் தாய்மாரைக்
கண்போல் பொத்திக் காப்பதுபோல்
உழவுத் தொழிலை உன்னதமாய்
உழன்று உவந்து ஆற்றிடுவார்
சேற்றைக் குழப்பி நாற்றுநாட்டு
ஏற்ற நாளில் களையெடுத்துக்
கூட்டுறவு வங்கி மருந்தையெல்லாம்
உரமாய் கொட்டி வளர்த்திடுவார்
கடின உழைப்பிற்குத் தகுந்தாற்போல்
கதிர்கள் செழித்துத் தழைத்திடுமே
போவோர் வருவோர் கண்ணெல்லாம்
பொறாமையாலே எரிந்திடுமே
மூன்றாண்டுக் கடனை அடைத்திடலாம்
மூக்குத்தி கம்மலை மீட்டிடலாம்
ஒழுகும் வீட்டின் கூரைநீக்கி

ஓடுபோட்டுச் சுகமாய் வாழ்ந்திடலாம்
மனதில் கனவுகள் ஏராளம்
மண்டைக்குள் ஆனந்தம் கூத்தாடும்
விளைந்த மகசூல் அறுக்கையிலே
விழுமே தலையில் பேரிடிகள்
பன்றி அழித்தது ஒருபங்கு
பதராய்ப் போனது ஒருபங்கு
தண்ணீர் வாரம் ஒருபங்கு
தரையில் உதிர்ந்தது ஒருபங்கு
மீதியைக் கோணியில் அளக்கையிலே
மின்னியை நெறிக்கும் கமிட்டிவிலை
கூடிப் பேசிய வியாபாரி
குறைத்துக் குறிப்பான் மதிப்பீடு
வாடிப்போன முகத்தோடு
வயிற்றில் எரியும் நெருப்போடு
உழைத்தவன் விழியில் உயிர்வடியும்
வலுத்தவன் பையில் பணம்நிறையும்
வாங்கிய கடனுக்கு வட்டிகட்டி
வாசலில் வசவுகள் வாங்கிக்கட்டி
அலைந்து அழுது வாழ்வதுதான்
அன்றைக்கும் இன்றைக்கும் உழவர்
நிலை
மானம் கெட்டுப் போனாலும்
மண்ணை மலடாய் விடுவதில்லை
வானம் பொய்த்துப் போனாலும்
மாற்றுத் தொழிலைப் புரிவதில்லை
ஏரின் பின்னால் உலகென்று
ஏற்றிச் சொன்னார் வள்ளுவனார்
ஊருக்கெல்லாம் உணவளிக்கும்
உழவன் பின்னால் உயிர்ப்பரிக்கும்
வறுமை எமனேச் சுற்றுகிறான்
வாழ்வைச் சுருக்கில் பற்றுகிறான்
பாரின் பசியைப் போக்கிடுவார்
ஏரின் மாந்தர் உழவரையே
தேரில் ஏற்றி வரவேண்டாம்
தெய்வம் என்றும் தொழவேண்டாம்
நேரில் பார்த்தால் கைகுலுக்கி
நேசத்தோடே நன்றி சொல்வோம் !

## தனிமையின் களிறுகள்

நிழலற்ற வறண்ட நிலத்தின்
நண்பகல் வெப்பமாய்
மொத்தமும் தீய்த்து
மௌனத்தின் அரியணையில்
கர்வத்தோடு வீற்றிருக்கும்
மதிப்பிற்குரிய பேரன்பைச்
சிறுபிள்ளையின் அடாவடியாய்
இன்னமும் விடவில்லை நான்
காற்றில் உதிரும்
நாவல் பழங்களைப்போல்
நெடுஞ்சாலையில் நைய நசுங்கி
பயனற்றுச் சிதைகிறேன்
மேற்கில் சாயும்
சூரியனின் கதிர்களால்
மொத்தமும் மஞ்சளாய் தழுவிய
ஆசிர்வதித்த நாட்களின்மேல்
துக்கங்களைப் போர்த்துகிறது
திடீர் விலகல்
நிலவற்ற அடரிருளில்
நட்சத்திரங்கள் முள்ளெனத் தைக்கும்
நரகவீதியில் பயணித்தல்
அன்றாட வழக்கமாகிட
நினைவின் கிளைகளை முறித்து
உண்ணத் துவங்குகிறது
தனிமையின் களிறுகள்
எறும்பின் நுகர்தலை முன்கொண்டு
பின்தொடர்கிறேன்
எங்கும் இல்லை சீனியின் வாசம்
இறுகிய பாறைமேல்
மீண்டும் துளிர்க்காதோ
கண்ணீரின் விதைகள்.

சிலுவையின் புனிதன்

கன்னி மரியாளின் பொன்மகன்
கஷ்டம் தமதேற்கும் உன்னதன்
மண்ணை இரட்சித்த மானிடன்
மனதில் வாழ்கின்ற ஞானியன்

எல்லா உயிருக்கும் தாயவன்
எங்கும் நிறைந்துள்ள சாமியன்
பொல்லா மனிதர்க்கும் காவலன்
பொன்னேக் கொடுத்தாலும் ஏழையன்

நில்லா உலகத்தில் நிலைத்தவன்
நீங்காப் புகழாலே நிறைந்தவன்
முள்ளால் முடிசூடி சிறந்தவன்
எல்லாத் துயருக்கும் மருந்தவன்

அன்பால் நெஞ்சங்கள் ஆள்பவன்
அகிம்சை விருட்சத்தின் வேரவன்
துயரக் கடலின் பாய்மரன்
தூய இருதயத் தாயவன்

தாவீது தேசத்தின் பாலகன்
தாராளக் கருணையின் நாயகன்
மரணித்தும் உயிர்கொண்டு மீண்டவன்
மகிமையால் மனங்களை மீட்பவன்

வெள்ளிக் காசுக்காய் தெரிந்தவன்
வேற்றுமை ஒழியவே உதித்தவன்
கல்வாரி மலையேறிக் காத்தவன்
கள்வர்க்கும் பரலோகம் பூத்தவன்

சிலுவைக்குப் புனிதத்தை அளித்தவன்
சிநேகத்தை வேதமாய் விதித்தவன்
பாவத்தின் சம்பளத்தைச் சுமப்பவன்
பாதையில் கம்பளங்கள் விரிப்பவன்

பாமரர் சிரிப்பினில் மணப்பவன்
பரீட்சையின் இறுதியில் ஒளிர்பவன்
பரிசுத்த ஆவியால் அருள்பவன்
பக்கத்தில் மேய்ப்பராய் நிறைந்தவன்

நேற்றைக்கும் இன்றைக்கும் உரியவன்
நாளைக்கும் காலைக்கும் கதிரவன்
ஆணுக்கும் பெண்ணுக்கும் கதியவன்
வானுக்கும் மண்ணுக்கும் இறையவன்.

மௌனத்தின் கூரியவாள்

*

சூறாவளியைக் கடத்தி
முற்றிலும் சிதைத்து
மௌனித்திருக்கிற
உன் வெறுப்பின்முன்
வண்ணங்கள் உதிர்ந்த
பட்டாம்பூச்சி நான்
உடைந்த நிலவின்
சில்லுகளைச் சேகரிக்கிறேன்
இதயமெங்கும் தைத்து
குருதியில் நனைந்துள்ளன
நட்சத்திரங்கள் .

*

ஏதும் பேசாமல்
திடீர் விலகலின் தண்டனை
வாழ்தலின் நரகவேதனை
தீயில் வேகும் சாபநாட்களைக்
கடத்துதலின் சிரமங்கள்
பாலைவனப் பயணியின்
கண்ணீர் வறண்ட கால்தடம்
உன்னோடு அருகிருந்து
கொண்டாடிய நாட்களைச்
சுழல்காற்றின் நீண்ட நா
சருகுகளாய் கிழித்தெறிந்து

சிதைக்கிறது
இரவெங்கும் தனித்தலையும்
வெளவாலோடு உறங்காமல்
இணைந்திருக்கிறேன்
உன் மௌனத்தின் கூரியவாள்
என்மகிழ்வின் சிறகுகள்
முத்தமுடவா நெருங்குகிறது?

*

தீப்பற்றிய வனமாய்
அணையாமல்
எரிந்துகொண்டிருக்கிறேன்
உன் மௌனத்தின் எரிபொருள்
நலம் விசாரித்துக் குழைகிறது
துளிர்களும்
மலர்களும்
கிளைகளும்
கனிகளும்
சாம்பலாகித் தீய்கிறேன்
உன் குளிர்ந்த கனமழை
வாய்க்கவில்லை இன்னும்.

*

பனிமூட்ட வெட்கங்களினால்
சுவையேற்றுகிறாய்
மயிலிறகின் காட்டில்
இணைபிரியாத் தடங்களில்
கூசிட அழைத்துப்போகிறாய்
பூல்லாங்குழலின் கீதத்தில்
சொக்கி வீழ்ந்திட
சில்லென்று விரல்கோர்க்கிறாய்
மரங்களின் குளிர்ந்த நிழலாகி
பூக்களினால் முத்தங்கள் தழைக்கிறாய்
இரவின் பெருங்குளிரைத்
தள்ளிநின்று வலுவேற்றி
வாழ்வளிக்கிறாய்
முல்லையின் மணமெங்கும்
உன்வாசம் உன்நேசம்
வெளிவேசம் செய்வதில்லை

–

பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.





# துளிப்பாக்கள்

வெளுத்து வாங்கிய மழைக்கு
நன்றி கூறியது
அடித்துச்செல்லப்பட்டத் தரைப்பாலம்

அடைமழை ஓய
அடுத்த மழைக்கு அழைப்பு விடுக்கிறது
அகோர வெயில்

காற்றோடு பேசியும்
தீராத மௌனம்
பூங்காவில் புத்தர் சிலை

எழுத்துகளற்றக் கவிதையை வாசிக்க
தவழ்கின்றன நீர் நிலைகள்

கனமழை
சிறுபுன்னகை மலர்கிறது
விடுமுறை அறிவிப்பு

ஆர்பாட்டமில்லாமல் அறிவிக்கின்றன
வானிலை அறிக்கையை
சேமிக்கும் எறும்புகள்

--

பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
6380704001

# தியானத்திலிருந்து

எழுந்து விட்டேன்
நகராமல் புத்தர் சிலை.

/
உன்னொருத்தியின்
கைவண்ணத்தில் பேரழகானது
என்வனம்.

/
தலைகீழாய் தொங்கும்
வெளவால்கள்; நெற்றிக்கண்ணை
திறந்து மூடுகிறார் சிவன்.

/
சுகம் சோகம் மகிழ்ச்சி
பசி வலி துயரம் துள்ளலென
அத்தனைப் பரிவாரங்களையும்
தன் வயலினிலிருந்து புறப்படும்
இசைஞானியின் ஒற்றைப் பாட்டில்
கொட்டித்தீர்க்கிறான் தெருப்பாடகன்.

/
உன் நர்த்தனத்தை நிறுத்தி
விடாதே; துடிப்பதை நிறுத்திவிடும்
என் இதயம்.

/
அதிகாரம் பறிக்கப்பட்ட
நாளில்; தூண்டில் புழுவாய்
கிடக்கிறேன்.

/
இருவர் மட்டும் இருக்குமிடத்தில்
திடீரென வீசும் துர்வாடைக்கும்
எனக்கும் எச்சம்பந்தமும்
இல்லையென்பதை நிச்சயம்
நீயறிவாய்.

/
ஆரம்பத்தில் நீங்கள்
எப்படி இருந்தீர்களோ
அப்படித்தான்
நானும் இருந்தேன்.
இப்போது நீங்கள்
இப்படி இருப்பதற்கு
ஒரு காரணம் இருப்பதுபோல்
நான் இப்போது
இப்படி இருப்பதற்கும்
ஒரு காரணம் இருக்கிறது.
ஒரு விதத்தில்
நீங்கள் இப்படி இல்லாமல்
அப்படியே இருந்தால்
நான் இப்படி இருப்பதற்கு
நீங்கள் வருந்தப் போவதில்லை.
நீங்கள் இப்படி இல்லாமல்
அப்படியே இருப்பதற்கு
உங்களுக்காக
நான் மட்டுமாவது
வருந்திக் கொள்கிறேன்.

/
ஜன்னலின் பக்கத்தில்
நீ நிற்பதற்கும்...
திரைச்சீலை காற்றில்
விலகுவதற்கும்...
அச்சமயம் தெருவில்
நான் கடப்பதற்கும்...
உன்னை நான்
தரிசிப்பதற்கும்...
அடடா... தப்பவில்லை
காதல் கணக்கு!

/
ஒன்று
நீ வேண்டும்.

இல்லையேல்
ராஜாவின்
பாட்டு வேண்டும்.
இவ்விரண்டுக்கு
மட்டும்தான்
இதயத்தை இதமாக்கும்
சூட்சுமம் தெரியும்.

/

என் ஐம்புலன்களும்
செயலிழந்ததாய்
அனுமதிக்கப் பட்டிருக்கிறேன்
அவசரப்பிரிவில்...
மருந்துவம் படித்தவனுக்கு
உன் மகத்துவமெங்கே
தெரியப் போகிறது.

/

பஞ்ச பூதங்களும் ஐம்புலன்களும்
இயக்கமற்றுப் போகட்டும்
பக்கத்தில் நீயிருந்தால் போதும்.

/

நேற்றைய இரவை
உன் கனவினைக் கொண்டு
நிரப்பிக் கொண்டேன்.
இன்றிரவும்
உன் கனவினைக் கொண்டு
நிரப்பிக் கொள்கிறேன்.

/

அமாவாசை இருட்டில்
உன்னை யார் வெளியே
வரச்சொன்னது?
நிலவு வந்து விட்டதாய்
வாண்டுப் பிள்ளைகளின்
அட்டகாசம் தாங்கவில்லை...!

/

“ஆம்”
என்ற ஒற்றை வார்த்தைக்கு
ஒரு வாரமா?
போதாது போதாது
மாதம் வருடம் கூட
எடுத்துக் கொள்
“ஆம்” என்ற
அந்த வார்த்தை மட்டும் சொல்
அதுதான் என் வேதம்.

/

நிலா வரும் முன்பு
நீ எதற்கு வந்தாய்?
என் கற்பனைத்தேர்
உன்னையே வட்டமடிக்குதடி
வஞ்சினமே!

/

பூவைப் பறித்து
அவள் கூந்தல் பூங்கொத்தில்
திணிக்கிறாள்.

/

அவளிரு
விழிகளோடு
வேதங்கள் ஆறு.

/

உன் அழகைப்போலவே
உன் சிணுங்கலைப்போலவே
உன் நாணத்தைப்போலவே
என் கவிதைகளும்
பிரவாகமெடுக்க விரும்புகிறேன்.

/

எனக்கடுத்தபடியாய்
என் கவிதைகளை நேசிப்பவர்கள்
மட்டும் எனக்கு வேண்டும்.

/
மொத்தமாய் என்னை
எடுத்து வைக்கிறேன்.
இருந்தும் நான் கொஞ்சம்
மிச்சம் இருக்கிறேன்.

/
என்மீது எனக்கு சந்தேகம்
வலுத்தபோது; உன்மீது காதலை
இன்னும் ஆழமாக்கினேன்.

/
எட்டாய் மடித்த கடிதத்திலும்
புத்தம்புது ரோஜாவிலும்
மெல்லத் தழுவும் தென்றலிலும்
புத்துணர்ச்சியோடு வருகிறது
உனக்காக என் காதல் இதயம்.

/
வாராத தூக்கத்தில்
நான் எப்படித் தூங்கி
எழுவேன்?

/
உன்னை எடுப்பதற்கு முன்
என்னை எடுத்து
வைத்து விட்டுப்போ.

/
இந்தக் கட்சி
இல்லையென்றால் அந்தக் கட்சி.
அந்தக் கட்சி
நீக்கி விட்டால் வேறு கட்சி.
வேறு கட்சி
திருப்தி இல்லாமல்
போனால் இருக்கிறது இன்னொரு
புதியகட்சி.
பணமும் பதவியும்
சொகுசு வாழ்வும்
நிரந்தரமாய் வேண்டும்.
வேடம் கட்டிய பின்
நடித்தாக வேண்டிய கட்டாயம்.
மேடை இல்லையென்றால்
தெரு இருக்கிறது.
நிறைய வேண்டும் இரும்புப் பெட்டி
தன்மானம்
சுயகௌரவமென்று
எனக்கு எதுவுமில்லை.
நான்
நிரந்தர அரசியல்வாதி.

/
அமைதியாய் வெடித்தது பருத்தி
ஊருக்கே பறைசாற்றுகிறது
காற்று.

/
கடைசியாகவே அணியப்பட்டு
முதலாவதாகவே கழற்றப்படுகிறது
பாதரட்சை.

/
கோப்பையில் இதழ் பதித்து
இளஞ்சூட்டில் தேநீரை
இதமாய்ப் பருகும்
அதிகாலை வேளையில்...
வண்ணம் கொண்ட
வண்ணத்துப் பூச்சிகள்
பூவனத்தைப் பரபரப்புடன்
வலம் வருவதுபோல்
என்னைச் சுற்றிச் சுற்றி
வருகிறது உன் ஞாபகங்கள்.

/
வானம்
பார்த்து விட்டேன்.

நீ வந்ததும்
நிலா பார்த்த
திருப்தியோடு
என் வேலையைத்
தொடங்குவேன்.

/
நேற்று - வந்த வருவாய்க்கு
கணக்கு.
இன்று - வந்த வருவாய்க்கும்
கணக்கு.
நாளை - வரப்போகும் வருவாய்க்கும்
கணக்கு.
இதுவே - நடுத்தர வர்க்கத்தின்
வாழ்க்கைக் கணக்கு.

/
நிறங்களை
அழிக்கும்
இருட்டு.

/
என் கைக்களுக்கு எட்டவில்லை
பூவென்று காற்றிடம் சொன்னது
யாராக இருக்கும்?

/
உண்மையைச் சொல்ல வந்து
பொய்யாய் விடைபெறுகிறேன்
உன்னிடத்தில்.
/
யாரைப்பார்த்தாலும்
உன்னைப் போல் தெரிவதால்
என்னை நான்
பார்த்துக் கொள்கிறேன்
நிலைக்கண்ணாடியில் ...!

–
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



இசைக்கலைஞரால்
தத்து எடுத்துக் கொண்ட
என் பிள்ளைக்கு
புல்லாங்குழல் என
பெயர் சூட்டப்பட்டுள்ளது
என்றது மூங்கில்.

புல்லாங்குழல் என
பெயர் மாற்றம்
செய்து கொண்டது
மூங்கில்...

மூங்கில் காட்டுக்குள் மழை
மூகாரி ராகம்..

அம்மா பிணம் சுமந்து
பிள்ளையை
புல்லாங்குழலாக்கியது.

–


ஆனந்தன்,
திருப்பூர்.



# வாழ்க்கை வாழ்வதற்கே...

வாழ்க்கை வாழ்வதற்கு, வாழ்வோம் வெல்வதற்கு
அற்ப கவலைகளை நினைத்து மனம் தளர்வதா ?
கடல் - தொடர் அலைகளினால் வற்றியா போகும் ?
தேயும் பிறையினால் வானம் பூமியா இறங்கும் ?
நாளும் - சோதனைகள் எமக்கு அனுபவமானால்
சாதனைகள் என்றும் நம் காலடியில் தானே !

பிறப்புக்களுக்கு இறப்பு நிச்சயம் தான் - ஆனால்
இடையில் - அனைவருக்கும் வாழ்க்கையும் உண்டு..
எல்லோரின் வாழ்க்கைக்கும் அர்த்தம் உண்டு
மண்ணில் - வாழ்க்கை என்பது வாழ்வதற்கே..
உலகில் நன்றாய் வாழப் பழகிக் கொண்டால்
எமது வாழ்க்கை அழகாய் அர்த்தம் ஆகும்...

வாழ்க்கை அர்த்தமானால் செயல்கள் நுட்பமாகும்
செயல்கள் நுட்பமானால் வாழ்வே சொர்க்கமாகும்...
மக்கிப்போன மண்கூட மாறிப்போகும் பக்குவத்தில்..
மனித வாழ்க்கையென்ன மாறாதா இலட்சியத்தில்?
கூட்டுப்புழு கூட வண்ணத்துப்பூச்சி ஆகையிலே...
மதிப்பு மிக்க மனித வாழ்க்கை மாறாதா என்ன ?

இன்று எடுத்துக்காட்டாய் வாழ்பவர்கள் தான்
முன்பு பிறரால் எடுத்துக்கட்டி பேசப்பட்டவர்களே....
பிறப்பிலிருந்தே மனிதனை மரணம் துரத்துகின்றது..
வாழ்வில் அதிசயம் என்னவென்றால் மரணம்
வாழ்க்கையை வென்றவரை தானே வாழ்த்துகின்றது...
வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்வோம் வாழ்வை வெல்வதற்கு....

--

சா.நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.

# பூ ஒன்றை வரைந்து

அவளின் பிறந்த
நாளுக்கு
பரிசளிக்கிறேன்

அவளோ
என்
சடலத்தின்
மீதோ
வீசியெறிந்துவிட்டு
போகிறாள்
கொடுத்த
பூக்கடிதங்களையெல்லாம் உதிரும்
மாலைகளாக கோர்த்து"........!!!!!!!

***

இரவில் ஒரு பகல்...... *

இரவு நேரம்
எல்லோரும் தூங்குவதற்கு
தயாராகிக்
கொண்டிருந்தார்கள்
நான் மட்டும்
திண்ணையில்
அமர்ந்து கொண்டு
மனதால்
ஒரு பகலை
வரைய முற்படுகிறேன்,

வானத்தை
நோக்கி கைகளை
நீட்டி
எல்லா நட்சத்திரங்களை
ஒன்றாக
இணைந்து
வட்ட வடிவில் பெரிய
சூரியனை
வரைந்து
காட்சிபடுத்துகிறேன்

கைகளின்
விரல்களால்
சூடு தாங்க முடியாமல்
நீட்டிய கைகளை
தரை கீழ்
நோக்கி மடக்குகிறேன்
நட்சத்திரங்களெல்லாம்
தரையில்
சிதறிக் கிடக்கிறது
மின்மினி பூச்சிகளாக,

நீண்ட உயர்ந்த
சுவரில் சூரியனை
வரைந்து தீப்பெட்டி
கொண்டு பற்ற வைக்கிறேன்
சிறிது நேரம்
எரிந்து விட்டு
அமிழ்ந்து விடுகிறது
பனிப்பொழி
அதிகமானதால்,

கருப்பு நிற
இருட்டை
வெள்ளை நிற
வேட்டியை கொண்டு
மறைத்து
வீதியெல்லாம் கட்டுகிறேன்

கருப்பு காகங்கள்
அழுது வெள்ளை
நிற வேட்டியையெல்லாம்
கருப்பு நிற
வேட்டியாக
மாற்றி விடுகிறது
காகங்கள்
தன் கண்ணீரால்
உரசி சென்றதால்,

விடியும் வரை
வரைந்துப்பார்க்கிறேன்
இருள் விலகி விட்டது
பகலான
இயற்கையின் விடியலால்
நான் அசந்து
தூங்கிக்கொண்டிருக்கிறேன்
மனதின்
பகல் வெளிச்சத்திலே".......!!!!!

***

அம்மா
இல்லாத
நேரங்களில்
குழந்தைகளுக்கு
அம்மாவாகவும்,

தம்பி
இல்லாத
வீடுகளில்
அடித்து விளையாடும்
தம்பியாகவும்,

அக்கா
இல்லாத
வீடுகளில் அரவணைத்து
கொள்ளும்
அக்காவாகவும்,

குழந்தைகளே
இல்லாத
பல வீடுகளில்
குழந்தைகளாகவும்
வளர்க்கப்படுகிறது
பொம்மைகள்,

பொம்மைகள்
குழந்தைகளுக்கான
குழந்தைகள்"............!!!!!

–

**கவிஞர் ச.சக்தி,**
அழகு பெருமாள் குப்பம்,
பண்ருட்டி,

# தோழர் ஜீவானந்தம் - கம்யூனிஸ்ட்களின் கடவுள்

படைப்பு எல்லாம் கடவுளுடையது என்றால் தாழ்ந்த சாதிக்காரர்கள் ஏன் கோயிலுக்குள் நுழையக் கூடாது என்றவர் ஜீவா. கோயிலை உருவாக்கியவன் மனிதன் கடவுளை உருவாக்கியவனும் மனிதன் தான் அது உண்மையான கடவுளென்றால் மனிதர்களில் இவன் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன் என்று பேதம் பார்க்குமா என்றவர் ஜீவா. உலகில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு சூரியன் உயர்ந்த சாதியினருக்கு ஒரு சூரியனா உதிக்கிறது என்றவர் ஜீவா. வர்ணாசிரம தர்மத்தை காந்தியடிகள் தூக்கிப் பிடிக்கிறார் என்பதற்காக காந்தியத்தைவிட்டு வெளியேறியவர். கடவுளை நம்பியவன் மதத்தைப் பின்பற்றுகிறான் மதம் மனுதர்மத்தைப் பின்பற்றுகிறது என்றவர் ஜீவா.

பாரதி ஜீவாவுடைய பள்ளித் தோழனாக இருந்தாலும் இருவரும் வெவ்வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தார்கள். வாழ்க்கையில் சுயஒழுக்கம் தான் ஒருவரின் உயர்வு தாழ்வை நிர்ணயிக்க வேண்டுமே தவிர பிறந்த குலம், சாதி அல்ல என்றவர் ஜீவா. தனித்தமிழ் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக தன் பெயரை உயிர்இன்பன் என மாற்றிக் கொண்டவர் ஜீவா. சொரிமுத்து என்ற குலதெய்வப் பெயரும் மூக்காண்டி என்று பெற்றோர் வைத்த பெயரும் நிலைக்கவில்லை தோழர் ஜீவானந்தம் என்ற பெயரே நிலைத்தது.

புத்தக வாசிப்பு தான் ஜீவானந்தத்தை மானுடனாக மாற்றியது. காங்கிரஸ் வெள்ளையரை விரட்டுவதிலேயே குறியாக இருந்தது. சுயமரியாதை இயக்கம் பிராமண எதிர்ப்பையே முன்னிறுத்தியது. இரண்டு பேரியக்கமும் சமதர்மத்தை சமூகத்தில் நிலைநாட்ட முயற்சி எடுக்கவில்லை. சுதந்திரத்துக்கு பின்னும் வர்ணாசிரம தர்மத்தை நாடு கடைப்பிடிக்க வேண்டும் என்ற காந்தியின் வாதத்தை எதிர்த்தவர் ஜீவா. தொழிலாளர் குடும்பத்தில் பிறந்து கடைசி வரை தொழிலாளர் உரிமைக்காக பாடுபட்டு உயிர்நீத்தவர் ஜீவா.

மேற்கு தாம்பரத்திலுள்ள கஸ்தூரிபாய் நகரிலுள்ள புறம்போக்கு நிலத்தில் மண்சுவர் கூட இல்லாத கூரை வீட்டில் கடைசிவரை வாழ்ந்தார். பெரியாருக்கு அறிமுகமாகும் முன்பே சமூகப்போராளியாக தீப்பந்தமாக எரிந்து கொண்டிருந்தவர் ஜீவா. பெரியார் திராவிடக் கொள்கைகளை தமிழ்நாடெங்கும் பரப்ப ஜீவாவை துணையாக்கிக் கொண்டார். ஜீவாவை யாரும் செதுக்கவில்லை சுயம்புவாக தோன்றியதால் தான் கடைசிவரை உரிமைக்காக அவரால் போராட முடிந்தது.

கேரளாவில் வைக்கம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று உயர் சாதிக்காரர்கள் சொன்ன போது அங்கு போராட்டம் வெடித்தது இந்தியா முழுவதும் அந்த விஷயம் பெரிதாக பேசப்பட்டது வைக்கம் போரில் பெரியாருடன் மாணவராக இருந்த ஜீவாவும் கலந்து கொண்டார். பிறந்த குலமும், சாதியும் எப்படி உயர்வு தாழ்வை நிர்ணயிக்கும் வாழ்க்கையில் சுயஒழுக்கமும் மனிதனின் செயல்பாடுகளும் தானே அவரவர் உயர்வு தாழ்வை நிர்ணயிக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழைய முடியாது என்றால் கடவுள் வெளியேறட்டும் தீண்டத்தகாதவர்கள் என்று அவர்கள் ஏன் ஒதுக்கப்படுகிறார்கள் என்ற கேள்விக்கு விளக்கம் சொல்லட்டும் என்று அறைகூவல் விடுத்தவர்தான் ஜீவா. சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஜோசப்பூதலிங்கம் என்பவரை கைப்பிடித்து கோயிலுக்குள் அழைத்துச் சென்றவர் ஜீவா.

அவமானங்களுகம் எதிர்ப்புகளும் போராளிகளை ஒன்றும் செய்துவிடமுடியாது என மெய்ப்பித்துக் காட்டியவர் ஜீவா. ஜீவா காந்தியடிகளுக்கு எழுதிய கடிதத்தில் கீதையில் குணத்தையும் செய்யும் தர்மத்தையும் பொருத்து மனிதர்களை நான்கு வர்ணமாக பிராமணன், சத்ரியன், வைசிகன், சூத்திரன் என்று பிரிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதே வேளையில் பிராமணன் நெறி தவறிப் போவானேயானால் அவன் வைசிகன் தானே. அதே வேளையில் வைசிகன் நன்னெறியைப் பின்பற்றுவானேயானால் அவன் பிராமணன் தானே என்ற கேள்விக்கு கடிதம் மூலம் காந்தியடிகள் இப்படி பதிலளித்தார்.

பிராமணன் தவறிழைத்தால் அவன் கெட்ட பிராமணன், வைசிகன் நன்னெறியில் நின்றால் அவன் நல்ல வைசிகன் என்றார். இந்தப்பதில் தான் ஜீவாவை காந்தியத்தைவிட்டு விலக வைத்தது. வ.வே.சு ஐயரின் பரத்வாஜ ஆசிரமத்தில் மாணாக்கர்களுக்கு காந்தியத்தை கொண்டுபோய் சேர்க்க ஆசிரியராகச் சென்ற ஜீவா அங்கு உயர்வகுப்பு மாணவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாறப்படுவதைப் பார்த்து ஆசிரமத்திலிருந்து விலகி சிராவயலில் காந்தி ஆசிரமத்தை தொடங்கினார். 1932ல் காந்தியின் சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு முதல்முறையாக சிறைக்குச் சென்றார்.

பகத்சிங் தோழர்களை சந்தித்தபின்புதான் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனினைப் பற்றிய அறிமுகம் கிடைத்தது ஜீவாவுக்கு. நாச்சியார்புரத்தில் உண்மை விளக்க நிலையம் என்ற ஆசிரமம் அமைத்து வர்க்கப் போரையும், சாதியத்துக்கு எதிரான போரையும் முன்று நின்று நடத்தினார். பகத்சிங் தனது தோழனுக்கு எழுதிய நான் ஏன் நாத்திகன் ஆனேன் என்ற கடிதத்தை மொழிபெயர்க்கும் பணியை பெரியார் ஜீவாவுக்கு வழங்கினார். அதை மொழி பெயர்த்ததுக்காக வெள்ளைய அரசாங்கம் ஜீவாவுக்கு விலங்கிட்டு அடித்து வீதிவீதியாக அழைத்துச் சென்றது. புரட்சி என்பது மக்களை மந்தை ஆடுகளாக கருதும்

அரசுக்கு எதிராக காட்டையே சாம்பலாக்க கனன்று எழும் சிறுதீப்பொறி என்று முழங்கியவர் ஜீவா. குனிந்து கொண்டே இருக்கும் வரைதான் குட்டுவான் எழுந்து நில் இந்த சிறுதீப்பொறி நாட்டையே பற்றி எரிய வைக்கக் கூடியதென்று ஒருநாள் அவனுக்கு புரியவை இதுதான் ஜீவாவின் சித்தாந்தம். தொழிலாளர்களுக்கு உரிமையைப் பெற்றுத்தர மேடை தோறும் முழங்கி பொதுக்கூட்ட மேடையிலேயே உயிர் விட்டவர் ஜீவானந்தம். 1952ல் சட்டமன்ற கூட்டத்தொடரில் தான் ஜீவா முதல்முறையாக தமிழ்நாடு என்ற வார்த்தையை பிரயோகப்படுத்தினார்.

ஒடுக்கப்பட்டோருடைய உரிமையை மீட்க ஊர்தோறும் கூட்டம் நடத்தி முழங்கிய ஜீவா தன் மகள் குமுதாவை அவள் பிறந்து 17 ஆண்டுகள் கழித்துதான் சந்திக்க முடிந்தது. பொது வாழ்க்கையில் ஜீவா பெற்றது குறைவு ஆனால் இழந்தது ஏராளம். தமிழ்மொழிக்காகவும், தமிழ்மண்ணுக்காகவும், தமிழ்மக்களுக்காகவும் தன் வாழ்க்கையையே தியாகம் செய்த தன்னலமற்றவர் ஜீவா. அக்காலகட்டத்தில் சாதிய அடக்குமுறைகளை பொதுமக்கள் மீது காட்டிய முதலாளிவர்க்கத்தின் மீது ஜீவாவைப்போல் யாருக்கும் கோபாவேசம் காணப்படவில்லை.

தனது கொள்கைக்கு ஒத்துப்போகாத இயக்கத்திலிருந்து விலகி சுயமரியாதை சமதர்ம இயக்கம் என்ற கட்சியைத் தொடங்கினார். விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயக் கருதியிருக்கின்றாயடா என்ற பாரதியின் வரிகளில் காணப்படும் ரௌத்திரம் ஜீவாவிடம் இருந்தது. ஜீவா தேடியதற்கான விடை மார்க்சியத்தில் தான் கிடைத்தது. 1929ல் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட ஜீவா தான் இறக்கும் வரை கம்யூனிஸ்ட்டாகவே இருந்தார்.

சாதியத்தை முற்றிலும் ஒழிப்பதே ஜீவாவின் கனவாக இருந்தது. ஜீவானந்தம் போராட்டங்களிலும், சிறையிலும், பொதுக்கூட்ட மேடைகளிலுமே தன் வாழ்நாளில் அதிக காலத்தை செலவளித்தார். இதனால் அவர்பட்ட அவமானம், அடிகள், எதிர்ப்புகள் ஏராளம். எதற்கும் அஞ்சாத சிங்கமாக வாழ்ந்தார் ஜீவானந்தம். அவர் காலத்தில் பல எழுச்சிமிக்க தொழிலாளர் போராட்டங்கள் நடந்தன. அதனை முன்னின்று நடத்திக் காட்டியவர் ஜீவானந்தம்.

தமிழக அரசியல் வரலாற்றில் விலைபோகாத மனிதர் ஒருவர் உண்டென்றால் அவர் ஜீவானந்தம் தான். எண்ணித் துணிக கருமம் என்ற வள்ளுவனின் வார்த்தைகளை வேத வாக்காக நம்பியவர் ஜீவானந்தம். இந்தியா சுதந்திரமடைந்த பின் கம்யூனிஸ்ட்கள் 1948ல் கல்கத்தாவில் ஒன்றுகூடினர். புரட்சிகள் கொடுங்கோலாட்சியின் கொடுமையை குறைக்கவில்லை இன்னொரு கொடுங்கோலனிடம் தான் ஆட்சியை ஒப்படைத்துள்ளன என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். புரட்சியின் மூலம் புதிய பாரதத்தைக் கண்டடைவோம் என கோஷம் எழுப்பினார்கள்.

*1948 – 50வரை கம்யூனிஸ்ட்கள் அரசின் அடக்குமுறைக்கு உள்ளானார்கள். கம்யூனிச வரலாற்றில் கருப்பு வருடங்கள் அவை. 1939 – 45 வரை தமிழ்நாட்டில் ஜீவா நடமாடமுடியாத சூழ்நிலை நிலவியது. அவருக்கு அரசாங்கம் வாய்ப்பூட்டு சட்டம் போட்டது. அப்படியும் அவருடைய போராட்டக் குணத்தை மழுங்கச் செய்ய முடியவில்லை. 1951ல் சிறையிலிருந்து விடுதலையாகிறார்.*

*அதுமுதற்கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியை உயிர்த்தெழ வைக்க வேண்டிய முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார். 1952ல் சென்னை வண்ணாரப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு வென்று முதல்முறையாக சட்டமன்றத்துக்குள் நுழைந்தார். ராஜாஜி முதல்வராக இருந்தபோதே குலக்கல்வியை எதிர்த்தவர் ஜீவானந்தம். 1962ல் தேர்தலில் இதே வண்ணாரப்பேட்டை நின்று தோற்கிறார். மண்ணுக்காகவும், மக்களுக்காகவும், மொழிக்காகவும் வாழ்ந்த ஜீவாவை தமிழக மக்கள் டெபாசிட் இழக்க செய்தார்கள். அந்த தேர்தலில் அவர் பெற்ற வாக்குகள் 10049.*

*அதே தொகுதியில் சுயேட்சையாக நின்ற எந்த அரசியல் பின்புலமுமில்லாத லிங்கேசனுக்கு கிடைத்த ஓட்டுக்கள் 8250. இது அனைத்தும் லிங்கேசனுக்கு கிடைத்த சாதிய ஓட்டுக்கள். எந்த சாதிய உணர்வை வேரறுக்க வேண்டுமென்ற ஜீவா தன் வாழ்நாள் வரை முழங்கினாரோ அந்த சாதிய உணர்வு நாடு சுதந்திரமடைந்த பின்பு அங்குசத்துக்கு அடங்காத மதம் பிடித்த யானையாகிவிட்டது.*

*தன் வாழ்க்கையை தமிழுக்காகவும், தமிழருக்காகவும் தியாகம் செய்த செய்த ஜீவாவால் ஒருமுறை மட்டுமே தமிழக சட்டமன்றத்துக்குள் நுழைய முடிந்தது. பிறந்தோம் இறந்தோம் என்பதல்ல வாழ்க்கை அநீதிக்கு எதிரான போராட்டத்தில் உயிரை துச்சமென மதித்து கலகக் குரல் எழுப்புவானாயின் நீ ஒருவனே மரணத்தை வென்றவன். ஜீவா தனியொருவனாக நின்று மரணத்தை வென்று காட்டிவிட்டான். தமிழகத்தில் பாட்டாளி மக்கள் இருக்கும் வரை ஜீவாவின் குரல் ஒலித்துக் கொண்டிருக்கும்.*



ப. மதியழகன்,
*115, வள்ளலார் சாலை,*
*ஆர்.பி.சிவம் நகர்,*
*மன்னார்குடி - 614001.*
*திருவாரூர் மாவட்டம்.*
*கைப்பேசி: 9597332952*
*பகிரி: 9384251845*

# அழகு

உச்சி நுகர் மூக்கில்
விழும் துவாரத்தில்
நுழையும் மூக்குத்தி
அழகு

பின்னலிடும் கூந்தலில்
மணங்களை தூவிடும்
பூக்களின் சிரிப்பு அழகு

அஞ்சனம் தீட்டிய
புருவங்களில் வரிசையாய்
விழும் வரிகள் அழகு

கொவ்வை செவ்வாய்
இதழ் விரிக்க
முத்துக்களாய் விழும்
வார்த்தைகள் அழகு

புலராத காலையில்
பனிகள் கோர்க்கும் வேளையில்
மார்கழியாய் நனைக்கும்
வாசல்வரும் கோலம் அழகு

பட்டுடை உடுத்தி
பருவத்தை மறைத்தே
பருவங்களை இழுக்கும்
மென்னடை அழகு

கோலவிழியாளே
தீனிகள் போட்டு
இதயத்தில் நுழையும்
சுவாசமே அழகு...

ஈரங்கள் கோர்த்த
கருங்கூந்தலை உலர்வித்து
மென்விரலால் பின்னலிடும்
கூந்தல் அழகு..

அந்திவானத்தில்
தீட்டிய சிவப்பும்
நுதல்மீதமர்ந்து
அலங்கரிப்பதுஅழகு...

கருவறை சுமந்தே
தொப்புள்கொடி அறுக்கும்
தாய்மை பேறு அழகு..

மென்மையில்
தன்மையாய் ஒலிக்கும்
பெண்மை
உலகெங்கும் அழகு..

–

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# சுவரொட்டியில்

காணாமல் போனதாய்
அறிவிக்கப்பட்ட
குழந்தையை
எப்படியேனும் பெற்றோர்களிடம்
சேர்த்து விடென
இறைவனிடம் பிரார்த்தித்துக்
கொண்டிருக்கிறான்...
சாலையோரங்களில் காகிதம்
பொறுக்கும் சிறுவன்!

**

அன்பெனப்படுவது
வேறொன்றுமில்லை ...
அடித்தவர்களுக்காய் அழுவது!

**

பத்து ருபாய் பொருளை
முப்பது ருபாய்
விலை நிர்ணயித்து ஐம்பது
சதவிதம் தள்ளுபடியென
விற்றுக்கொண்டிருக்கும்
பிரம்மாண்டமான அங்காடிகளில்
குவிந்துகிடக்கும் மக்களைப்
பார்த்து வருந்திக்கொண்டிருக்கிறது...
வாசலில் கேட்பாரற்று கிடக்கும்
வியாபாரிகளின் மனது!

**

கண்ணீர்த்துளிகள்
நிரப்பிக் கொண்டிருக்கின்றன...
வெற்றிடங்களை,
காலம் நிரப்பாத போது!

**

பறவையாய்
பிறந்திருக்கலாமென்கிறான்,
மரமாய்
பிறந்திருக்கலாமென்கிறான்,
நிலவாய்
பிறந்திருக்கலாமென்கிறான்,
வண்ணத்துப்பூச்சியாய்
பிறந்திருக்கலாமென்கிறான்...
மனிதனைத் தவிர
எல்லா பிறப்பையும் கேட்கிறான்...
மனிதனாய் பிறந்த மனிதன்!

***

இதற்கு முன்பு
கண்டுகொள்ளப்படாமல் போன
ஒருவன்
இப்போது மாண்டுவிட்டான்,
அவனைப் பற்றி பேச
புதுப்புது வார்த்தைகளைத்
தேடிக்கொண்டிருக்கிறோம்,
அவனைப் பற்றி எழுத
யாரும் அறியாத சொற்களைப்
பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்,
அவனின் நிழற்படத்தில் துயரத்தை
கண்ணீர்த்துளியாய்
சொட்டிக்கொண்டிருக்கிறோம்...
அவன் இவற்றையெல்லாம்
கண்டிருந்தால் முன்பே
மரணித்திருப்பான்,
நடித்தவர்களால்
நடுத்தெருவிற்கு வந்தவனுக்கு
வேறொன்றும் எளிதில்லை...
செத்துப்போவதை விட!

**

எல்லோரும்
இங்கு காதலிக்கிறார்கள்...
காதலிக்கவில்லையென்று
சொல்பவர்கள்
பொய்யொன்றை காதலியாக்கி
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

**

என்னையெனக்கு
பிடிக்காத நேரத்தில்
பறக்கும் முத்தமொன்றை
வீசி செல்கிறாள்...
பெயர் தெரியாத சிறுமி ஒருத்தி!



--
மு.முபாரக்,
+91 8072600090

---

# என் கிறுக்கல்களில்

ஒன்றிரண்டு வார்த்தைகள்
உனக்கென
சேமித்து வைக்கிறேன்
முதல்முறை..

என்னைக் காட்டிலும்
என் வரிகள்
அதிசயித்து நின்றன..

எழுதாத என் வரிகளில்
என்றாவது
நீயும் இருக்கலாம்...

எழுதும் வரிகளில்
உன் அன்பைப் போல்
எதிர்பாராமல்
நீ கூட இருக்கலாம்,
என் பயணத்தில்
உன் திரும்புதல்கள்
இருக்கும் வரை...

ஆனால்..,
எதுவொன்றிலும் உன்னை
அடையாளப் படுத்தியதில்லை...
வரிகளிலும் அழகு தான் நீ...

உன்னைக் கவிதையாக்கியபின்,
படைப்பில் சிறந்த ஏதாவதொன்றை
நான் தேடித்
தோற்பது நிச்சயமே..!

–
கவிமலர் த.சரண்யா,
பாலக்காடு மாவட்டம்,
கேரளா.



# இரண்டு அலைகளின்

சமாதானங்களை
கேட்காமலேயே
வீடு திரும்பியது
அவள் மனது

அவள் பாதத்தில் வருடி
இடம் பிடித்து
வீடு சேர்ந்த மணல்
கடலை வரைந்து
கொண்டேயிருந்தது
அவள் மனதில்.

***

## இந்த இரவு நேரப் பனியை

இரு உடல்களும் அருந்தி
அறையில் ஒரே மெழுகுவர்த்தியின்
உடலாகப் பிரகாசிக்கிறது
மெத்தை முழுவதும் இருட்பாசி

ஜன்னல் துளைகளின் வழியாக
நம்மைப் பார்த்து
வெளியே நட்சத்திரங்கள்
அதிக போதையேற்றி கொள்கிறது

மாயா
உன் விரலில் விளைந்த எழுத்துகளில்
வீழ்ந்து போதையேற்றி கொள்கிறது
இதயம்

அந்த கணம் தென்படும்
நட்சத்திரப் புயலைக் கண்டு
கரையொதுங்கும் மேகங்களைக் கண்டு
ரசிக்கிறேன்

உன் ஆடை தளர்ந்து காமக் கேணியில்
வீழ்ந்து
மீட்டெடுக்கிறேன் நம் ஆதி காதலை
ஆனால் கதவுகள் பூட்டியே
கிடக்கிறது மாயா.

***

## மழை காலம் முடிந்து

பனியுதிர் காலத்தில்
வாசல் பூசனி பூவும்
டிசம்பர் பூக்களின்
மணமும்
மறந்துபோகுமா என்ன
பனி உதிரும்
இலையெங்கும்
பிரபஞ்சத்தை
புகைப்படம் எடுத்தவாறே
நகர ஆரம்பிக்கிறது
பனித்துளி

சீசன் பூக்களும்
மார்கழி பாவியமும்
பனித்துளிகளோடு
அடர்த்தியாக்குகிறது
இந்த மாதத்தை.

***

## இந்த அழகான மர்மங்கள் அற்ற

மரத்தின் இலைகளில் வசந்தம்

ஒளிந்துள்ளது

ஒரு நேர்கோட்டில் பயணிக்கும்
இந்த சாலையில் அவ்வளவு
அதிசயம் இல்லை

வளைந்தோடும் கிளைகளில் மின்னும்
காற்றில் கரைகிறது இந்த பூமி

நதி தேடி
கடல் தேடி
கரை தேடி அமர்ந்த
வசந்தம் தன் வனப்புகளை
உள்வாங்கி ரசிப்பதில்லை
வெளியே கொட்டிவிட்டு
வெற்று உடலாகத்தான் திரும்புகிறது

பூ பூத்து உதிரும் ஓர் உயிர்ப்பும்
இலையுதிர்த்துச் சிதறும்
முதிர்ந்த வனப்பும்
இறகு உதிர்ந்த வாழ்வும்
பிரதிபலிக்கிறது

இந்த வாழ்வின்
மெல்லிய ஆழமான இசையை
நான் மறந்து போனேன்
ஒரு பறவையோடு

என் வாழ்வும்
கரைந்தது அதன் உயரத்தில்

பறவையின் தொண்டைக் குழி
இசையோடு
தன்னை வெளிப்படுத்தும்
ஒவ்வொரு விலங்கின் குரல்களும்
வியப்புதான்

மண்ணோடு வேர்களும்
விண்ணோடு உரையாடும்
கிளை இலை பூக்களும்
ஆரத் தழுவும் அமைதியின்
அரக்கனைத் தரிசித்து
பறவையின் நேசங்களை ரசிக்காமல்
காலம் சுழலாது எனக்கு

புனிதம் என்றால் சிந்திக்காத
இயல்பு ஓட்டங்களை
சொல்லிவிடலாம்.

***

## ஒரு ஊரில் ஒரு ராஜா எனக் கதை சொல்லிய

பாட்டியிடம்
நமது ஊரில் யார் ராஜா
எனக் கேட்டது குழந்தை

எப்படிச் சொல்வது
இந்த கால ராஜாக்களின்
சிம்மாசனங்களைப் பற்றி
நமது ஊரில் நரிதான் ராஜாவாம்
என்று தொடர்ந்தாள் பாட்டி
குழந்தைகள் விடுவதாக இல்லை
நரிகளைப் பற்றிக் கேட்டுக் கொண்டே
இருந்தார்களாம்.

***

## வெள்ளைக் காகிதம் ஒன்றை

வானமாக்கினாள்
அதில் சில பறவைகளைப்
பறக்கவிட்டாள் அந்தச்சிறுமி
ஓவியம் அழகு என்றேன்

அதற்கு அவள்
வானத்தில் பறக்க ஆசை என்று
கூறியவாறே
ஒரு வீட்டை வரைந்தாள்.

***

## தொடர் பெய்த மழைக்கு

விடுமுறை விட்டது போல்
தெளிந்தது மண்வாசம்

மழையில் நனைந்ததை
அசைபோட்டபடி
சிறு வெயிலைக்
குறை சொல்லிக்கொண்டே
மரத்தருகில் ஒதுங்க நினைத்த
மனிதர்களுக்கு
இன்று பனித்துளிகளைச்
சொட்டு சொட்டாகத்
தெளிக்கிறது இலைகள்

கடுமையான குளிர்
காலம் மூட்டிய தீயில்
குளிரும் எரிந்துகொண்டே நகரும்
அந்த தீ புத்தனின் மௌனத்தை
வெளிப்படுத்திக்கொண்டே
எரிந்து அணைகிறது.

***

## மண்

உடலைப் புசித்து
கிளையைப் பரப்பி
நீர் சுரந்து
நிலம் அசைத்து
பறந்து போகும்
இந்த பறவையை
தாங்கி பிடித்த பந்தமே

நழுவி விழும்
ஓர் மழைத்துளியைப்போல்
உதிர்ந்து போனது இறகுகள்

நதிக்கரை ஓரமோ
சமுத்திரத்திலோ
மிச்சமும் கரைந்துபோக
வாழ்க்கையை
தேடித்தேடி அலைகிறது
நினைவுகள் .

***

## பரிணாமத்தாலும் எனக்குள்ளிருந்த

அழிக்கமுடியாத காடு ஒன்றை
சுமந்தே திரிகிறது உடல்
அனிச்சையாக என் உடைகளைக்
களைந்தெறிகிறது என் உணர்வுகள்
என் நினைவில்
முளைத்துக்கொண்டேயிருக்கிறது காடு

என்னை முதலில் சுமந்து கரைசேர்த்த
மீன் மிருகம் உடலில்
நீந்திக்கொண்டேயிருக்கிறது
அந்த கணம் அவளும் களைந்தெறிந்த
ஆடைகளற்ற பொழுதில்
காடுகளின் வாசனை
பற்றிக்கொண்டு எரிந்து
தீர்ந்துபோகிறது காடு

பரிணாமத்தால் கடத்தப்படாமலேயே

விதைகள் எரிந்து சாம்பலாய்
கெஞ்சுகிறது பச்சையத்தின் யாசகனாய்

தழைக்கிறது உலோக உடல்கள்.

***

## பிறந்துவிட்டோம் என்பதை உணர உணர்ச்சி தேவையாகிறது

கடல் ஆலையால் உணர்ச்சியை
எழுப்பிக்கொண்டே பாடுகிறது

ஒரு பறவை இறகால் இசைத்து
உணர்வைத் தளர்த்துகிறது இந்த
வெளியில்

பூக்கள் முழுவதுமாக இதழ் விரித்து
தேனைச் சொட்டுகிறது இது ஒரு
அழகான அறிவிப்பு

விதைக்கு இரு விதையிலை அழகு

மேகத்தின் உணர்ச்சியில் வழிகிறது
தண்ணீர்

ஆதவனின் அரவணைப்பில்
எப்பொழுதும் வெப்பத்தின் இசை

விந்து தன் இமைகளைத் திறந்து
தேடுகிறது சூல் இமைகளை
இரு இமைகளின் இசையால் வேர்
விரித்து வளர்கிறது கரு

இறுதியான இசையில்
எதையோ நோக்கி
வாழ்ந்து முடிந்து
நிறைவான உணர்ச்சியில்
நன்றி கூறி
இங்கிருந்து
வசந்தத்தோடு பறக்கிறது
பறவைகள்

பிறந்துவிடும் உணர்வோடு
மீண்டும் வருகிறது பறவைகள்.

–

**ப. தனஞ்ஜெயன்,**
*9751800333*

# வேலியே பயிரை மேய்கிறதே....

விளையும் நிலம்தனில்
வளரும் இளம் தளிர் ...

இடர் தரிந்து வளர தான்
வேலியே தவிர
அது தன் பசி தீர அல்ல...

வேலிக்கு தன் பணி தெரிந்தும்
இச்சைக்கு பசி தீர்ப்பது
முறைதானோ..

இங்கு நிலம் இந்த சமுதாயம்...
வேலி ஆசிரியர்கள்....
தளிர் .... (வார்த்தைகள் வரவில்லை)

எங்கு செல்கிறது இச் சமூகம்

விலங்கிட்ட பெண் விலங்குடைத்து
சிறகடிக்க ஈரடி தத்தி நிற்க ...
எதிர் கொண்டு நிற்பது...
சொல்லவும் நாக்கூசும் எதிர்பார்ப்பு...

ஆளுமை மிக்க ஆண்மை பெண்ணின்
கண்ணியம் காக்க மறந்து அவள்
பெண்ணியத்தை சோதிப்பது ஏனோ?

அடிமை விலங்கினை உடைத்த
அவர்களை அலங்கார பதுமைகளாக
நினைப்பது யார் குற்றம்.?..

தரிகட்டு ஓடும் குதிரைகளை
சாட்டைகையர் கொண்டு திருத்தும்
சாரதிகள் தன்னிலை மறந்து திரம்
கெட்டு திரிவது தகுமா?

தந்தையுள்ளம் கொண்டு பார்க்க
வேண்டிய பிள்ளைகளை இச்சை
கொண்டு பார்ப்பது முறைதானா?...

சமூகத்தை செதுக்க வேண்டிய
சிற்பிகள் வளரும் சமூகத்தை
சிதைப்பது சரிதானா...?

ஆணுக்கு பெண் நிகர் என்று முழங்கிய
என் பாட்டன் இருக்க வேண்டும்
உங்கள் சீர்கெட்ட இந்த செயல்களை
காண...

எழுத்தாணி கொண்டு சிதைத்து
இருப்பான் உங்கள் காம கொடூர
கண்களை...

என்ன செய்து விட போகின்றது இந்த
சட்டம் என்ற எகத்தாளம் தானே
உங்களை கிளிற செய்கின்றது?

எச்சரிக்கை செய்கின்றேன் உங்கள்
வீட்டு பெண்ணுக்கு ..உன்னை
பெற்றவர் முன் கவனமாக இரு என்று...

பெண்ணே....

அகம்பாவம் மிக்க இந்த
அதிகாரத்துக்கு அடி பணியாதே...

தவறு என்று உன் மனதிற்கு படும்
பட்சத்தில் தண்டிக்க துணிவுகொள்..
தந்தைக்கு உபதேசம் செய்த தேசம்
இது...

ஆண்களை மிரட்ட ஆயுதம் பல தேவை இல்லை ...

தைரியம் மிகுந்த ஒரு பார்வை போதும்..
துணிவு கொள்... துவண்டு போகாதே...
பாரதியின் பேத்தி நீ என்பதை
நினைவு கொள்....

நீதி மருப்புகாக
பொறுமை இழந்த கண்ணகி எரிதாள் மதுரையை என்பது வரலாறு..

மறவாதே
நீ கண்ணகி வழி வந்தவள் என்பதை....
தமிழ் பால் குடிதவள் என்பதை....
பாரதியின் பேத்திகள் என்பதை ...

--
கவிபாரதி. சதிஷ்,
விருதை.

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal  Thiravukolmagazine